P.N. No. 343 Date:28.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.12.2013

8.9.2013 அன்று வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மஞ்சக்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதம்பி என்பவரின் மகன் யுவராஜ்;

18.11.2013 அன்று கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த சேலம் மாவட்டம், ‘B’-நாட்டாமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் சண்முகவேலு;

15.12.2013 அன்று வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், உடையாம்புளி கிராமம், மஜரா கொல்லங்குளம் பகுதியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி இசக்கியம்மாள்;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9